


**03. 04. 2026**

தலைப்புச் செய்திகள்

1. தமிழக சட்டப்பேரவை தேர்தலுக்கான வாக்கு சேகரிப்பில் அரசியல் கட்சி தலைவர்கள் முனைப்புடன் ஈடுபட்டுள்ளனர்.

2. தமிழ்நாட்டில் வேட்பாளர் பட்டியலை இறுதி செய்யும் பணிகளை பிஜேபி, காங்கிரஸ் கட்சிகள் முடுக்கிவிட்டுள்ளன.

3. தமிழகம் முழுவதும் கண்காணிப்பு நடவடிக்கைகளை தேர்தல் பறக்கும் படையினர் தீவிரபடுத்தியுள்ளனர்.

4. ஏசு பிரான் சிலுவையில் அறையப்பட்ட புனித வெள்ளி இன்று அனுசரிக்கப்படுகிறது.

5. ஐ.பி.எல் 20-20 கிரிக்கெட் போட்டியில் சென்னையில் இன்று இரவு ஏழரை மணிக்கு சென்னை சூப்பர் கிங்ஸ் - பஞ்சாப் கிங்ஸை எதிர்கொள்கிறது.

இனி விரிவான செய்திகள்

***********

தமிழ்நாடு பிரச்சாரம்

தமிழ்நாட்டில் 234 சட்டப்பேரவை தொகுதிகளுக்கு ஒரேகட்டமாக வரும் 23ஆம் தேதி நடைபெறும் சட்டப்பேரவை

தேர்தலுக்கான வாக்கு சேகரிப்பில் அரசியல் தலைவர்கள் முனைப்புடன் ஈடுபட்டு வருகின்றனர்.

திமுக தலைமையிலான மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து அக்கட்சியின் தலைவர் திரு.மு.க.ஸ்டாலின் நெல்லையில் இன்று பிரச்சாரம் மேற்கொள்கிறார்.

அதேபோல் அஇஅதிமுக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து அக்கட்சியின் பொதுச்செயலாளர் திரு.எடப்பாடி கே.பழனிச்சாமி திருப்பத்தூர் வேலூர் ராணிப்பேட்டை மாவட்டங்களில் இன்று வாக்கு சேகரிக்கிறார்.

ஈரோடு மாவட்டம் கோபிசெட்டி பளையத்தில் இன்று பிரச்சாரம் மேற்கொண்ட தமிழக வெற்றி கழகத்தின் திரு. செங்கோட்டையன் "அனைவருக்கும் வேலை, அனைவருக்கும் பொருளாதார வளர்ச்சி" என்ற நோக்கில் த.வெ.க செயல்படுவதாக கூறினார்.

திருப்பூர் மாவட்டம் பல்லடத்தில் பிரச்சாரம் மேற்கொண்ட நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் திரு.சீமான் மாநிலத்தில் மின் கட்டணம், சொத்து வரி உயர்வால் பொதுமக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக குற்றம் சாட்டினார்.

ஸ்ரீபெரும்புதூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் திமுக வேட்பாளருக்கு ஆதரவாக தேமுதிக பொதுச்செயலாளர் திருமதி பிரேமலதா இன்று வாக்கு திரட்டினார்.

***********

பிரச்சாரம் - பிரதமர்

இதனிடையே வரும் 9ஆம் தேதி வாக்குப்பதிவு நடைபெற உள்ள புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு.நரேந்திரமோடி இன்று பிரச்சாரம் மேற்கொள்வதோடு சாலை பேரணியிலும் பங்கேற்கிறார்.

கேரள சட்டப்பேரவை தேர்தலை ஒட்டி ஐக்கிய ஜனநாயக முன்னணி கட்சி வேட்பாளர்களுக்கு ஆதரவாக காங்கிரஸ் கட்சியின் திருமதி பிரியங்கா காந்தி கொல்லத்தில் இன்று பிரச்சாரம் மேற்கொள்கிறார்.

***********

வேட்புமனு

இதனிடையே தமிழக சட்டப்பேரவை தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் வரும் திங்கட்கிழமை முடிவடைகிறது.

இதுவரை ஆயிரத்து 51 ஆண்கள், 309 பெண்கள், ஒரு மாற்று பாலினத்தவர் என மொத்தம் ஆயிரத்து 361 பேர் வேட்பு மனு தாக்கல் செய்துள்ளனர்.

மனுக்கள் வரும் செவ்வாய்கிழமை பரிசீலிக்கப்படுகின்றன.

இந்நிலையில் தமிழக வேட்பாளர் பட்டியலை இறுதி செய்யும் பணியில் பிஜேபி மற்றும் காங்கிரஸ் கட்சிகள் மும்முரமாக ஈடுபட்டுள்ளன.

சென்னையில் இன்று நடைபெறும் பிஜேபி நிர்வாகிகள் குழு கூட்டத்தில் அக்கட்சியின் தமிழக தேர்தல் பொறுப்பாளர் திரு.பியூஷ்கோயல் வேட்பாளர் பட்டியலை இறுதி செய்வார் என தெரிகிறது.

காங்கிரஸ் கட்சியின் வேட்பாளர் பட்டியல் தயாரிப்பு பணிகள் 85 சதவிகிதம் முடிவடைந்துள்ள நிலையில் எஞ்சிய பணிகள் இன்று இறுதி செய்யப்பட்டு வேட்பாளர் பட்டியல் வெளியிடப்படும் என்று அக்கட்சி அறிவித்துள்ளது.

***********

பறிமுதல்

சட்டப்பேரவை தேர்தலில் பண பட்டுவாடாவை தடுக்க மாநிலம் முழுவதும் கண்காணிப்பு நடவடிக்கைகளை தேர்தல் பறக்கும் படையினர் தீவிரபடுத்தியுள்ளனர்.

ராணிப்பேட்டை மாவட்டம் அரக்கோணத்தில் உரிய ஆவணங்கள் இன்றி கொண்டு செல்லப்பட்ட ஒருலட்சத்து 26 ஆயிரம் ரூபாய் பறிமுதல் செய்யப்பட்டது.

திருவண்ணாமலை மாவட்டம் ஒருலட்சத்து 74 ஆயிரத்து 400 ரூபாய் ரொக்கம் கைப்பற்றப்பட்டு கருவுவூலத்தில் ஒப்படைக்கப்பட்டது.

திருச்சி லால்குடி அருகே வேட்பாளர் உறவினர் இல்லத்திலிருந்து 50 லட்ச ரூபாய் ரொக்கத்தை தேர்தல் பறக்கும் படையினர் அளித்த தகவலின்பேரில் வருமான வரித்துறையினர் பறிமுதல் செய்தனர்.

***********

விழிப்புணர்வு

வரும் சட்டப்பேரவை தேர்தலில் அனைவரும் வாக்களிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை தேர்தல் ஆணையம் மேற்கொண்டுள்ளது.

தர்மபுரி மாவட்டத்தில் 100 சதவிகித வாக்குப்பதிவை வலியுறுத்தி நடைபயணத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சதீஸ் இன்று தொடங்கிவைத்தார்.

என் வாக்கு விற்பனைக்கு அல்ல உள்ளிட்ட விழிப்புணர்வு வில்லைகளை தண்ணீர் கேன்களில் ஒட்டும் பணிகளையும் அவர் தொடங்கிவைத்தார்.

ஈரோடு மாவட்டத்தில் 100 சதவிகித வாக்குப்பதிவை வலியுறுத்தி மாவட்ட தேர்தல் அலுவலர் திரு.கந்தசாமி தலைமையில் சைக்கிள் பேரணி நடைபெற்றது.

வேலூரில் வாக்காளர் விழிப்புணர்வு மாரத்தானை மாவட்ட தேர்தல் அலுவலர் திருமதி சுப்புலெட்சுமி தொடங்கிவைத்தார்.

இதுகுறித்து எமது செய்தியாளர்

வாய்ஸ்

***********

புதிய ஆட்சித்தலைவர்

தூத்துக்குடி மாவட்டத்தில் நேர்மையான அமைதியான வாக்குப்பதிவிற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்று புதிதாக இன்று பொறுப்பெற்றுக்கொண்ட மாவட்ட

ஆட்சித்தலைவரும், தேர்தல் அலுவலருமான திரு.விஷ்ணு மகாஜன் கேட்டுக்கொண்டார்.

வாய்ஸ்

***********

புனிதவெள்ளி

கிறிஸ்தவர்கள் கடைபிடிக்கும் 40 நாள் தவக்காலத்தின் முக்கிய நிகழ்வான ஏசு பிரான் சிலுவையில் அறையப்பட்ட புனித வெள்ளி இன்று அனுசரிக்கப்படுகிறது.

குடியரசு துணை தலைவர் திரு.சி.பி.ராதாகிருஷ்ணன் வெளியிட்டுள்ள செய்தியில் இயேசு கிறிஸ்துவின் வாழ்வும் போதனைகளும் அனைவரையும் பணிவு, தன்னலமின்மை, நீதி ஆகிய பாதையில் பயணிக்க தூண்டுவதாக குறிப்பிட்டுள்ளார்.

பிரதமர் திரு.நரேந்திரமோடி விடுத்துள்ள செய்தியில் ஏசு கிறிஸ்துவின் தியாகத்தை நினைவு கூறும் இந்நாள் நல்லிணக்கம் கருணை மன்னிப்பு ஆகிய விழுமியங்களை வலுப்படுத்துவதாக குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே தமிழகத்தின் அனைத்து கிறிஸ்தவ தேவாலயங்களில் ஏசுவின் சிலுவை பாடுகளை தியானிக்கும் சிறப்பு பிரார்த்தனைகளும் ஆராதனைகளும் இன்று நடைபெற்று வருகின்றன.

தூத்துக்குடி பனிமயமாதா பேராலயத்தில் ஏசு கிறிஸ்துவின் சிலுவை பாடுகளை நினைவு கூறும் வகையில் சிலுவை பாடு நிகழ்ச்சி தத்ரூபமாக இன்று நடைபெற்றது.

இதில் ஆயிரக்கணக்கான கிறிஸ்தவர்கள் பங்கேற்றனர்.

நெல்லை பாளையங்கோட்டை தூய சவேரியார் பேராலயத்தில் சிறப்பு பிரார்த்தனை நடைபெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

புனித வெள்ளியின் தொடர்ச்சியான ஏசுவின் உயிர்ப்பு பெருவிழா நாளை மறுநாள் கொண்டாடப்படுகிறது.

***********

ராஜ்நாத்சிங்

வளர்ச்சி அடைந்த இந்தியா என்ற தொலைநோக்கு பார்வையில் கடல்சார் திறன் இன்றியமையா பங்கு வகிப்பதாக மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு.ராஜ்நாத்சிங் தெரிவித்துள்ளார்.

விசாகப்பட்டினத்தில் ஐ.என்.எஸ். தாராகிரி-யை கடற்படையில் இணைக்கும் நிகழ்வில் இன்று உரையாற்றிய அவர், நாட்டின் 95 சதவிகித வர்த்தகம் கடல்வழி பாதைகள் மூலமாகவே நடைபெறுவதாக கூறினார்.

நாட்டின் எரிசக்தி பாதுகாப்பு கடல்களையே சார்ந்துள்ளதாக திரு.ராஜ்நாத்சிங் எடுத்துரைத்தார்.

***********

ஜெய்சங்கர்

மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் ரஷ்ய முதல் துணை பிரதமர் Danis Manturov-வை இன்று புதுதில்லியில் சந்தித்து பேச்சுவார்த்தை மேற்கொண்டார்.

வர்த்தகம், தொழில், எரிசக்தி, உரங்கள் இணைப்பு வசதிகள் மற்றும் போக்குவரத்து ஆகிய துறைகள் குறித்தும் தொழில்நுட்பம் புத்தாக்கம் முக்கியத்துவம் வாய்ந்த கனிமங்கள் சார்ந்த புதிய வாய்ப்புகள் குறித்தும் இருதரப்பினரும் விரிவான ஆலோசனை மேற்கொண்டனர்.

கடந்த டிசம்பர் மாதம் நடைபெற்ற 23ஆவது இந்தியா ரஷ்யா வருடாந்திர உச்சிமாநாட்டில் பல்வேறு முடிவுகளை செயல்படுத்துவதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களையும் இருவரும் ஆய்வு செய்தனர்.

மேற்காசியாவில் நிலவும் பதற்றமான சூழல் மற்றும் பிராந்திய உலகளாவிய நிகழ்வுகள் குறித்தும் இருவரும் கருத்துக்களை பரிமாறிக்கொண்டனர்.

***********

சமையல் எரிவாயு

சமையல் எரிவாயு மற்றும் பிற பெட்ரோலிய பொருட்களை பதுக்குதல் கள்ளச்சந்தையில் விற்பனை செய்தல் போன்ற முறைகேடுகளை தடுக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களை மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது.

இதுதொடர்பாக பெட்ரோலிய மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சக செயலர் டாக்டர் நீரச் மிட்டல் எழுதியுள்ள கடிதத்தில் சமையல் எரிவாயு குறித்து சமூக மற்றும் மின்னணு ஊடகங்கள் மூலம் உண்மையான தகவல்களை வெளியிடுவதை உறுதி செய்ய வேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளார்.

தட்டுப்பாடு ஏற்படுவதாக தவறான தகவல்களை பரப்புவோருக்கு எதிராக கண்காணிப்பு நடவடிக்கைகளை தீவிரபடுத்தவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

நாட்டில் போதுமான கச்சா எண்ணெய் கையிருப்பில் உள்ளதாகவும், பெட்ரோல் டீசலும் போதுமான அளவில் பராமரிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

***********

பால்வள அமைச்சகம்

நாட்டின் கடல் உணவு ஏற்றுமதி கடந்த 11 ஆண்டுகளில் சராசரியாக ஆண்டுக்கு 7 சதவிகிதம் உயர்ந்துள்ளதாக மத்திய மீன்வள அமைச்சகம் தெரிவித்துள்ளது.

சென்ற நிதியாண்டில் 62 ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேலாக ஏற்றுமதி அதிகரித்துள்ளதாக கூறியுள்ளது.

350க்கும் மேற்பட்ட வகையான கடல் உணவு பொருட்கள் 130 சந்தைகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

நாட்டின் மீன்வளத்துறை உணவு பாதுகாப்பு, வேலை வாய்ப்பு ஏற்றுமதி வருவாய் மற்றும் நிலையான

வாழ்வாதாரத்திற்கு பெரும் பங்களிப்பை வழங்கும் முக்கிய துறையாக உருவெடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

***********

நீலகிரி

உதகையில் கோடை சீசனை ஒட்டி சுற்றுலா பயணிகளுக்கு இடையூறு ஏற்படுத்தாத வகையில் 3 மாதங்களுக்கு திரைப்பட படப்பிடிப்புகளுக்கு அனுமதி கிடையாது என தோட்டக்கலை துறை தெரிவித்துள்ளதாக எமது செய்தியாளர் கூறுகிறார்.

வாய்ஸ்

***********

கிரிக்கெட்

ஐ.பி.எல் 20-20 கிரிக்கெட் போட்டியில் சென்னையில் இன்று இரவு ஏழரை மணிக்கு சென்னை சூப்பர் கிங்ஸ் - பஞ்சாப் கிங்ஸை எதிர்கொள்கிறது.

***********

கால்பந்து

Male-இல் நடைபெறும் 20 வயதிற்குட்பட்ட ஆடவர் தெற்காசிய கூட்டமைப்பு கால்பந்து சாம்பியன் பட்ட போட்டியின் இறுதி ஆட்டத்தில் இந்தியா இன்று பங்களாதேஷை எதிர்கொள்கிறது.

***********

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது